சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 204/2023

| | |
|---|---|
| பெயர் | : ரித்திஷ் |
| தகப்பனார் பெயர் | :சோமன் |
| கணவர் பெயர் | : |
| வயது | :40 |
| கிராமம் | :கொட்டாம்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :Union Bank of India, கொட்டாம்பட்டி கிளை மேலாளர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

05.04.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதிவங்கியின் மேலாளர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். பிரதிவாதிகள் எங்களது கிளையில் கல்விகடன் பெறுவதற்காக கடந்த 14.09.2013 அன்று கொடுத்துள்ள கல்விக்கடனுக்கான விண்ணப்பம் வா.சா.ஆ.1. 24.09.2013 தேதியிட்ட கடன் வழங்குவதற்கான உத்தரவாணை வா.சா.ஆ.2. 24.09.2013 தேதியிட்ட கடன் ஒப்பந்தம் வா.சா.ஆ.3. 24.09.2013 தேதியிட்ட ரூ.3,09,000 /-த்துக்கான கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.4. 24.09.2013 தேதியிட்ட உத்தரவாத கடிதம் வா.சா.ஆ.5. 24.09.2013 தேதியிட்ட 1ம் பிரதிவாதி கொடுத்துள்ள உத்தரவாத கடிதம் வா.சா.ஆ.6. வங்கி கடன் வரவு, செலவு கணக்கு வா.சா.ஆ.7.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.04.05 18:57:05 +0530

Sub Judge

Melur